








# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : கீ ப ரா வி

மலர் 1 இதழ் 45 5.11.2025



ஸ்ரீமத் ஸ்ரீவராஹ மஹாதேசிகன்
ஸ்ரீமுஷ்ணம் சின்னாண்டவன்

**ஸ்ரீமதே வராஹ மஹாதேசிகாய நம:**

# உள்ளே....

## படித்து
## பின்பற்ற வேண்டிய
## முத்துக்கள்
## உபதேசங்கள்



# முத்துக்கள்

சிஷ்யனின் ஆத்ம க்ஷேமத்தை ஆசார்யனும், ஆசார்யனின் திருமேனி க்ஷேமத்தை சிஷ்யனும் கவனிக்க வேண்டும் என்று சாஸ்திரம்.

*****************************************************

"சிஷ்ய லக்ஷ ணத்திற்கும் ஆசார்ய லக்ஷணத்திற்கும் எல்லை நிலம்"

*****************************************************

ஸ்ரீபாஷ்யம் நான்கு அத்யாயங்களைக் கொண்டது. பரப் ரஹ்மமான ஸ்ரீய:பதியே ஸர்வசேஷீ என்பதைத் தெளிவு படுத்துகிறது. ஸ்ரீபாஷ்யம் 'அ' காரத்தில் ஆரம்பித்து 'ம' காரத் தில் முடிகிறது. இடையில் 'உ' காரம் உள்ளது. ராமாயணம் எப்படி காயத்ரியின் அர்த்தமோ, அவ்வாறே ஸ்ரீபாஷ்யமும் ப்ரணவாகாரமாக உள்ளது. இந்த க்ரந்தத்தை இயற்றிய இரா மாநுசருக்கு பாஷ்யகாரர் என்ற பெயர் வந்தது.

*****************************************************

ஜீவன் உஜ்ஜீவிப்பதற்கு பிராட்டி மூன்று விதமான உபகாரம் செய்கிறாள். புருஷகாரத்வம், உபாயத்வம், உபேயத்வம் என்ற மூன்று. பாபங்களைச் செய்துள்ள ஜீவன் பரமாத்மாவான பக வானை நேராக அணுகி சரணாகதி பண்ணி, மோக்ஷத்தை ப்ரார்த்தித்தால்,அவன் பாபியான ஜீவன் மேல் சீற்றங்கொண்டு நிச்சயம் தண்டனையைக் கொடுக்க முற்படுவான். அதே ஜீவன் கருணையே வடிவு கொண்ட பிராட்டியின் சிபார்சை பெற்றால் அவள் கூறுவாள்:

பாபாநாம் வா சுபாநாம் வா வதார்ஹாணாம் ப்லவங்கம் |
கார்யம் கருணமார்யேண நகஸ்சித் நாபராத்யதி II|

பாபமோ, புண்யமோ எது செய்தவர்களாயினும், கொல்லத் தக்கவர்களே ஆயினும் ஆசார்யனால் இரக்கம் காட்டத் தகுந் தவர்கள். உலகில் குற்றம் செய்யாதவர் யாருமே கிடையாது என்று உரைத்து இரக்கம் காட்டுபவள் பிராட்டி. பிராட்டியின் புருஷகாரத்வத்தினால் சீற்றம் தணிந்த பகவான் அவளுடைய சிபார்சை ஏற்று சரணாகதனுக்கு சரண்யன் அபயம் அளிப்பான்.

**********************************************************

ஸ்ரீக்ருஷ்ணன் ஹ்ருஷீகேசன் ஆனதால் இந்த்ரியங்க ளுக்குத் தலைவன். ஆகையால் சிஷ்யன் அர்ஜுனனின் மனது எனும் இந்த்ரியத்தைத் தன் வசமாக்கிக்கொண்டு அவனது மனதில் ஒரு கலக்கத்தை உண்டுபண்ணி, போர்களத்தில் தன்னை வழிகாட்டும்படி கேட்க வைத்து, அதை வ்யாஜமாகக் கொண்டு, உலகத்தில் உள்ளவர்கள் எல்லோரையும் நல்வழிப் படுத்த பகவத் கீதையை உபதேசித்தான்.

**********************************************************

வராஹாவதாரத்தில் பூமிதேவியை அசுரனிடமிருந்து மீட்டின பொழுது, பூமிப்பிராட்டியின் வேண்டுகோளுக்கு இணங்கி 'வராஹ சரம ஸ்லோக''த்தை அருளியுள்ளான்.

"ஸ்திதேமநஸி ஸுஸ்வஸ்தே சரீரேஸதியோ நர:
தாதுஸாம்யே ஸ்திதேஸ்மர்த்தா விச்வரூபம் ச மாமஜம்|
ததஸ்தம் ம்ரியமாணம்து காஷ்டபாஷாணஸந்நிபம்
அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாம் கதிம் ||"

அந்திமதசையில் மனிதனுக்கு பகவானை வேண்டிக்கொள் ளும் நினைவு ஞாபகசக்தி வராமல் தடுமாறுவான். தாதுக்கள் க்ஷிணதசையில் இருக்கும்போது பகவந்நாமத்தைச் சொல்ல நாக்கு எழாது.மனிதன் சுய நினைவு இருக்கும்போதே, பக வானை நினைத்துக்கொண்டு நாமஸ்மரணம் பண்ணி ஸ்ரீமந் நாராயணனின் உதவியை வேண்டியிருந்தால் அந்த பக்தனை பகவான் தவறாமல் மரணதசையில் வந்தடைந்து பரமபதம் அழைத்துச்செல்ல வழித்துணையாகிறான். ஒரு சிறிய உபாயமான சரணாகதி செய்தவனுக்கு பெரிய பலனை அருளக்கூடிய மாயவன் பகவான். இப்படி உதவுகிற பரமாத்மாவை துதிப் போமாக.

*********************************************************

நான்குவித புருஷார்த்தங்களைப் பெற ஸாதனமாக யக்ஞம், பக்தி, ப்ரபத்தி முதலியவைகள் வேதத்தில் விதிக் கப்பட்டிருக்கிறது. இவற்றை அனுஷ்டிப்பது வேதமார்கம். இதைப்பற்றிய தவறான அபிப்ராயங்களைப்போக்கி உண் மையை நமக்கு ஆசார்யர்கள் உபதேசிக்கிறார்கள். ஆதலால் இவ்வாசார்யர்களை ''ஸ்ரீமத் வேதமார்க ப்ரதிஷ்டாபனாசார் யர்'' என்று சிறப்பித்துக் கூறுகிறோம். நித்ய நிர்தோஷப் பெருமை வாய்ந்தவர்

ஸ்ரீமந்நாராயணன். அவரைப் பற்றி பேசு கின்ற வேதம் ஸ்ரீமத், ஸ்ரீய:பதி. வேதம் முதலிய விஷயங் களை நமக்குத் தெளிவு படுத்தும் ஆசார்யர்கள் ஜ்ஞான அனுஷ்டான வைராக்ய சீலர்களானபடியால் இவ்வாசார்யர்கள் ஸ்ரீமான்கள்.
****************************************************
மறுபிறவியில்லாமல் மோக்ஷத்தை அடைய நம் முன்னோர்கள் வகுத்த வழிதான் நல்வழி. இதை நமக்குக் காட்டிக்கொடுத்த ஆசார்யர்களை பூர்ணபக்தியுடன் வணங் குவோம். ஆசார்யன் சிஷ்யனுக்கு உபதேசம் செய்வது ஒரு பலனை எதிர்பார்த்து அல்ல. ஆசார்யன் பணம், நிலம், ஆடை,ஆபரணங்கள் முதலியவைகளை சிஷ்யர்களிடமிருந்து கேட்டுப் பெறுவதில்லை.
*****************************************************
ஸ்த்ரீகளுக்கும் சூத்ரர்களுக்கும் மந்த்ரஜபத்தில் ஸ்வரம் - ப்ரணவம்-அங்க ந்யாஸம் - வேறு விதிகள் - எவையும் கிடையாது. மந்த்ரத்தை மட்டும் சொல்வதுவே அவர்களுக்கு ஜபமாக விதிக்கப்பட்டுள்ளது.
*****************************************************
பாஞ்சராத்ரத்தில் கர்மம் வைதிகம் - தாந்திரிகம்- வைதிக தாந்த்ரிகம் என்று மூன்று வகையாகக் கூறியுள்ளது. அந்தணர்களுக்கு வைதிகம்; அரசர்களுக்கு வைதிகதாந்த்ரிகம்; வைச்யர்களுக்கும் சூத்ரர்களுக்கும் தாந்த்ரிகம்; எல்லோருக்கும் தாந்த்ரிகமாகவும் இருக்கலாம்.
*****************************************************
விஷ்ணுவைக் காட்டிலும் வேறான சேதநாசேதநங்கள் எல்லாம் நாரம். அவற்றை இருப்பிடமாகக் கொண்டவன் நாராயணன்.
*****************************************************
வேண்டிய பலனைப் பெறுதற்குப் பல மந்த்ரங்களும் பல விரதங்களும் எதற்காக? 'நமோ நாராயணாய' என்னும் மந்த்ரம் ஒன்றே எல்லாப் பயன்களையும் அளிக்கவல்லது.
*****************************************************
எப்படி எல்லாத் தேவர்களுக்குள்ளும் நாராயணனைக் காட்டிலும் உயர்ந்தவன் இல்லையோ அப்படியே எல்லா மந்த்ரங்களுக்குள்ளும் அஷ்டாக்ஷரத்தினும் சிறந்த மந்திரம் இல்லை.